بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/03/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## அருளுக்குரிய ரமலானின் சிறப்புகள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் இறையச்சத்தைப் பெறுவதற்கான ஞானமிக்க எடுத்துரைப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ. اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ

فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ

فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

(திருக்குர்ஆன் (அதிகாரம் அல் பகரா) 2:184,185)

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னிருந்த மக்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சத்தைப் பெறலாம்.

கணிக்கப்பட்ட சில நாள்களாகும். எனவே, உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் அத்தனை நாள்களின் நோன்புகளை மற்ற நாள்களில் நிறைவு செய்யட்டும். மேலும், ஆற்றலுடையவர்கள் பரிகாரமாக ஒரு மிஸ்கீனுக்கு உணவளிக்க வேண்டும். எவர் ஒருவர் நஃபிலான நற்செயல் செய்வாரோ அது அவருக்கு மிகவும் நல்லதாகும். மேலும், நீங்கள் அறிவீர்களாயின், நீங்கள் நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது.

அல்லாஹ்வின் அருளால் ரமலான் மாதம் துவங்கி விட்டது. **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

இது மிகவும் மகத்துவமிக்க, அருள்களைக் கொண்ட மாதமாகும். அல்லாஹ் தஆலா இந்த மாதத்தில் தன்னுடைய அடியார்களுக்குத் தன்னுடைய அருள்களை வழங்குவதற்காக மிகவும் கருணையாளனாகி விடுகின்றான். அல்லாஹ்வோ சாதாரண நாள்களிலும் தன்னுடைய அடியார்களுக்கு, நாம் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது அளவுக்கு அருள்களைப் பொழிகின்றான்.

அவன் இந்த மாதத்தில் குறிப்பாக, ஷைத்தானை விலங்கிட்டு அவனது பிடியிலிருந்து வெளியே வருவதற்கான ஏற்பாட்டைச் செய்யும் போது, அதற்கு உதாரணம் கொடுப்பதற்கு நம்மிடம் வார்த்தைகளே இல்லை. கடந்த நாள்களில் இபாதத்கள் செய்வதில் என்ன சோம்பேறித்தனத்தை நாம் காட்டினோமோ அந்தக் குறையை நிறைவு செய்வதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் இந்த மாதத்தில் செய்து விட்டான்.

ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களில் தர்ஸுக்கான ஏற்பாடு உள்ளது. அவ்வாறே MTA விலும் ஏற்பாடு உள்ளது. இதிலிருந்து பயன் பெற வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேட முயற்சி செய்ய வேண்டும். பிறகு, அந்த சூழலின் தாக்கத்தை நாம் நம்முடைய வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்க வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கும், கருணைக்கும் நிரந்தர வாரிசுகளாக ஆகிக் கொண்டே செல்வோம்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:** தொலைந்து போன தன் குழந்தை கிடைக்கும் போது ஒரு தாய்க்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதோ, அதைவிட அதிகமான மகிழ்ச்சி அல்லாஹ்வுக்கு தொலைந்து போன தன் அடியான் கிடைக்கும் போது ஏற்படுகிறது. அல்லாஹ் தன் அடியானிடம் மகிழ்ச்சி கொள்ளும் போது அவனுக்கு எல்லையற்ற முறையில் வழங்குகிறான். எனவே, ரமலானின் இந்த சூழலிலிருந்து பயன் பெறுவோமாயின் நாம் நற்பேறு பெற்றவர்களாவோம்.

சூரா அல் பகராவின் இந்த வசனங்களில் அல்லாஹ் இறையச்சத்தை மேற்கொண்டவாறு தன்னுடைய கட்டளைகள்படி நடக்குமாறு வழிகாட்டியுள்ள அதே வேளையில், மற்ற சில கட்டளைகள் பற்றியும் கூறியுள்ளான். நோன்புகளின் நோக்கம் இறையச்சத்தின்படி நடப்பதாகும். செல்வந்தர்கள் தமக்கு அக்கம் பக்கம் உள்ள ஏழைகளை ரமலானில் குறிப்பாக கவனித்தில் கொள்ள வேண்டும்.

விருந்துகள் வடிவில் நடைபெறும் பெரும் பெரும் இஃப்தார்களில் பொதுவாகவே எனக்கு உடன்பாடு இல்லை. இவை அனைத்தும் வெளிக்காட்டுதல் மற்றும் பித்அத் எனும் சாயலைப் பெற்று விட்டன. ரமலானிலோ திருக்குர்ஆனை ஓதுதல் கற்றுக் கொடுத்தல், (பிறர்) ஓதக் கேட்டல் (பிறருக்கு) ஓதிக்காட்டுதல், இறைவணக்கங்கள் மற்றும் இறைதியானம் ஆகியவற்றின் பக்கம் அதிகம் கவனம் இருக்க வேண்டும்.

நோன்பு பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான கேடயமாகும். ஆனால், கேடயத்தைப் பயன்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். இல்லையெனில், ஷைத்தானோ எல்லா நேரமும் மனிதனை வழிகெடுப்பதற்கான கடுமையான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறான். இபாதத்கள் மற்றும் திக்ரே இலாஹி எனும் அரண் நம்மை ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்து காப்பாற்றும்.

ஷைத்தானை ஒன்றும் சாதாரண விஷயமாகக் கருதி விடக்கூடாது. அவன் அல்லாஹ்வின் அடியார்களில் பெரும்பாலார் என்னுடைய வழிகெடுத்தலுக்கு ஆளாகி எனக்குப் பின்னால் செல்வார்கள் என்று பெரும் சவால் விடுத்துக் கூறியுள்ளான். எனவே, நாம் ரமலானில் அவனுடைய இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். பிறகு, நாம் இபாதத்கள் மற்றும் திருக்குர்ஆனின் கட்டளைகள்படி செயல்படுதல் எனும் ஆயுதத்தால் எப்பொழுதும் ஷைத்தானை எதிர்கொண்டு கொண்டே செல்வதற்கான முயற்சியை செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நோன்பின் உண்மைத்துவம் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:**

"நோன்பின் உண்மைத்துவத்தையும் மக்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள்..... நோன்பு என்பது அதில் மனிதன் பசியுடனும் தாகத்துடனும் இருப்பது மட்டும் அல்ல. அதையும் தாண்டி, அதற்கு ஓர் உண்மைத்துவமும் அதற்கான ஒரு தாக்கமும் உள்ளது. அது அனுபவத்தால் தெரிய வருகிறது.

மனிதன் எவ்வளவு குறைவாக உண்கிறானோ அவ்வளவே அவனது ஆன்மா தூய்மை அடைவதும், அவனது கஷ்ஃபின் ஆற்றல்கள் அதிகரிப்பதும் மனிதனின் இயல்பில் உள்ளது. ஓர் உணவைக் குறைத்து மற்றோர் உணவை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்றே எல்லாம் வல்ல இறைவன் விரும்புகிறான். மனிதன் இறைவனை நினைவு கூர்வதில் மூழ்கியிருக்க வேண்டும். இவ்வாறு உலகைத் துண்டித்து கொண்டு முழுமையாக இறைவன் புறம் சென்று விடும் நிலை ஏற்படும்."

எனவே, ரமலானில் திருக்குர்ஆனை ஓதுதல் புரிதல் ஆகியவற்றுடன் சேர்த்து, இபாதத் மற்றும் திக்ரே இலாஹி ஆகியவையும் மிகவும் அவசியமாகும். உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். அவனது தூய்மையை எடுத்துரைக்க வேண்டும். அதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள துஆ இருக்கிறது. அது இல்ஹாமிய துஆவும் ஆகும். அதாவது,

سُبْحَانَ اللّٰہِ وَبِحَمْدِہٖ سُبْحَانَ اللّٰہِ الْعَظِیْمِ اَللّٰھُمَّ صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

இது ஒரு மிக முக்கியமான துஆ ஆகும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதுவது அவசியமாகும். இது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் இறையச்சத்தின்படி நடக்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஏறத்தாழ எல்லா சபைகளிலுமே இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹுஸைர் (அலை) அவர்களின் ஒரு கவிதை(யின் முதல்) வரி இவ்வாறு உள்ளது: *ஹர் எக் நேக்கீ கீ ஜட் யே இத்திக்கா ஹே.* அதாவது, ஒவ்வொரு நன்மையின் ஆணி வேர் இந்த இறையச்சம் ஆகும்.

அப்பொழுது அல்லாஹ் அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக கவிதையின் அடுத்த வரியை இவ்வாறு கூறினான்: ***அகர் யே ஜட் ரஹீ சப் குச் ரஹா ஹே.*** அதாவது, இந்த ஆணி வேர் நிலைத்திருந்தால் அனைத்தும் இருக்கிறது.

ஆக, அல்லாஹ்வுக்குப் பிடித்தது இறையச்சம் தான். அது ஒவ்வொரு நன்மையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. இறையச்சம் உலக ஆடம்பரங்களை விட்டும் தூய்மையாக்குகிறது. எனவே, இறையச்சத்தைப் பெறுவது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

இந்த வசனங்களிலிருந்து மற்ற வசனத்தில் நோன்புகள் பற்றிய சில கட்டளைகள் கூறப்பட்டிருக்கின்றன.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

இந்த கணிக்கப்பட்ட சில நாள்களிலும் அல்லாஹ் நோன்பை கடமையாக்கி இருந்தும் உங்களுக்கு வசதியை வழங்குகிறான். எனவே நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர்கள் தங்கள் மீது தேவையில்லாத சுமையை சுமத்திக் கொள்ளக் கூடாது. உடல் நலம் பெற்ற பிறகு அல்லது பயணம் முடிவடைந்த பிறகு நோன்புகளை முழுமை செய்து கொள்ள வேண்டும். கடமையை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும்; ஆனால், தேவையில்லாத சுமையையும் சுமத்திக் கொள்ளக் கூடாது.

**ஃபித்யா கொடுப்பதற்கான கட்டளையிடப்பட்டுள்ளது.** ஆனால், இது ஒவ்வொருவருக்கும் அல்ல. மாறாக, வசதி படைத்தவருக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. இதனால் இரட்டிப்பு நற்கூலி கிடைக்கின்றது. இது கூடுதல் நன்மையாகும்.

பிறகு பாலூட்டக்கூடிய தாய்மார்கள் இருக்கிறார்கள். அல்லது நிரந்தர நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்வாய்ப்புக்கு ஏற்ப ஃபித்யா வழங்குமாறு வழிகாட்டி விட்டான். மேலும், நீங்கள் ஃபித்யா கொடுப்பது நோன்பு நோற்பதற்குப் பகரமானதாகும் என்று கூறிவிட்டான். ஃபித்யாவினால் ஏழைகளுக்கு உதவி கிடைக்கிறது.

ஒருவகையில் இங்கும் அடியார்களுக்கு உரிமையை செலுத்துவதற்கு இபாதத்தின் தரத்தை வழங்கி விட்டான். இதுதான் இஸ்லாத்தின் இறைவன் ஆவான். அவன் கருணை இன்றி வேறு ஒன்றுமே இல்லை.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்த ஃபித்யா எதனால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று ஒருமுறை எனக்குத் தோன்றியது. அப்பொழுது நல்வாய்ப்புக்காக என்பது தெரிய வந்தது. இதன் மூலம் நோன்புக்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைக்கப் பெறும். எல்லாம் வல்ல இறைவன் முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான். அவன் நாடினால் வயிற்றுப்போக்கு உள்ள ஒருவனுக்கும் நோன்பு வைப்பதற்கான ஆற்றலை வழங்க முடியும். அந்த ஆற்றல் கிடைத்து விட வேண்டும் என்பதே ஃபித்யாவின் நோக்கமாகும். இது அல்லாஹ்வின் அருளால் ஏற்படுகிறது.

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அசல் விஷயமாவது, திருக்குர்ஆனின் சலுகைகள்படி அமல் செய்வதும் இறையச்சமாகும். அல்லாஹ் தஆலா பயணிகளுக்கும் நோயாளிகளுக்கும் மற்ற நாள்களில் நோன்பு வைப்பதற்கான அனுமதியும் சலுகையும் வழங்கி இருக்கின்றான். அந்தக் கட்டளைபடியும் அமல் செய்ய வேண்டும்.

எவர் ஒருவர் நோயாளியாகவோ, பயணியாகவோ இருக்கக்கூடிய நிலையில் நோன்பு நோற்கின்றாரோ அவர் இறைவனின் தெளிவான கட்டளைக்கு மாறு செய்கின்றார். ஈடேற்றம் இறைவனுடைய அருளால் தான் கிடைக்குமே அன்றி, தம்முடைய அமல்களின் ஆற்றல்களைக் காட்டி எவரும் ஈடேற்றத்தைப் பெற முடியாது. நோயாளியும் பயணியும் நோன்பு வைக்கிறார்கள் என்றால், அவர்கள் கட்டளைக்கு மாறு செய்தது கண்டிப்பாக அவர்களுக்குப் பொருந்தும். அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்யுங்கள். இதுவே இறையச்சம் ஆகும்.

அல்லாஹ் நமக்கு அல்லாஹ்வின் விருப்பத்தின் வழியில் நடந்தவாறு இறையச்சத்தோடு ரமலானைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நமக்கு நம்முடைய இறையச்சத்தின் தரத்தை உயர்த்துவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நாம் எப்பொழுதும் இஸ்லாத்தின் அழகான போதனைகள்படி செயல்படக்கூடியவர்களாக இருப்போமாக!

ஒவ்வொரு நாளும் நமக்கு பரக்கத்துகள் மற்றும் கருணைகளுக்கான வழிவகைகளைக் கொண்டு வரட்டுமாக! நாம் ரமலானிலிருந்து உண்மையான முறையில் பலன் பெறக்கூடியவர்களாக ஆவோமாக! இந்த ரமலான் நம்மை அல்லாஹ்வுக்கு மிக அருகில் கொண்டு செல்லக்கூடியதாக ஆகட்டுமாக! நமக்கு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கட்டுமாக!

முழுவுலகின் அஹ்மதிகள் ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காகவும் எல்லா விதமான சிரமங்கள் அகன்று விடுவதற்காகவும் துஆ செய்யுங்கள். அரசாங்கங்கள் மற்றும் ஒவ்வொரு தீயவரின் தீங்கிலிருந்தும் அல்லாஹ் தஆலா நம்மைப் பாதுகாத்து வைப்பானாக!

இறைவழியில் சிறை சென்றவர்களின் விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள். மேலும், இவ்வாறு துஆ செய்யுங்கள்: ஒருபோதும் நம்முடைய எந்தவொரு தடுமாற்றம் காரணமாகவும் விடுபட்டிராத வகையில் நாம் அல்லாஹ்வின் ஆடையைப் பற்றிப் பிடித்திருப்போமாக! எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள்களின் மழை எப்பொழுதும் நம்மீது பொழிந்து கொண்டே இருக்கட்டுமாக!

முஸ்லிம் உலகத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! அவர்கள் வந்திருக்கக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆவார்களாக!

போர்களின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். முஸ்லிம் நாடுகளில் ஆற்றலைப் பெறுவதற்காக செய்யப்படுகின்ற போர்களின் விளைவாக அப்பாவி பொதுமக்கள் அநீதி எனும் ஆட்டுரலில் அரைக்கப்படுகிறார்கள். அல்லாஹ் அவர்கள் மீதும் கருணை புரிந்தவாறு அந்த அநீதி இழைப்பவர்களிடமிருந்து விடுதலை அளிப்பானாக!

உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தஆலா போரிலிருந்தும் அதன் பயங்கரமான விளைவுகளில் இருந்தும் காப்பாற்றுவானாக! போர் நடக்கும் சூழ்நிலையில் அஹ்மதிகளும் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது வெளிப்படையான விஷயம் ஆகும். அல்லாஹ் தஆலா அவர்களை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! அதிலிருந்து தப்பிப்பதற்காகவும் ஒவ்வோர் அஹ்மதியும் தனது இறையச்சத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அல்லாஹ் தஆலா எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

இங்கு யூகேவிலும் முஸ்லிம்களுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுவதாகத் தெரிகிறது. நாம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்: அல்லாஹ் நம்மையும் இங்குள்ள மற்ற முஸ்லிம்களையும் அதன் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ
يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ
اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا
اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ـ

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)